ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: **dcommunications@cbsl.lk, communications@cbsl.lk**
வெப்தளம்: **www.cbsl.gov.lk**

# பத்திரிகை வெளியீடு

**வெளியிடுபவர்** பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
**திகதி** 2017.07.07

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - ஏப்பிறல் 2017

**பொதுநோக்கு**

2017 ஏப்பிறலில் இலங்கையின் வெளிநாட்டுத் துறை ஒரு கலப்புச் செயலாற்றத்தினைக் காட்டியது. 2017 ஏப்பிறலில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்த போதிலும், இறக்குமதிச் செலவினங்களின் உயர்ந்தளவிலான வளர்ச்சியானது வர்த்தகப் பற்றாக்குறையில் ஓர் விரிவாக்கத்தினைத் தோற்றுவித்தது. 2017 ஏப்பிறலில் சுற்றுலா வருவாய்கள் அதிகரித்தமைக்கு மத்தியிலும் வர்த்தகப் பற்றாக்குறை விரிவாக்கத்துடன் கூடிய தொழிலாளர் பணவனுப்பல்களின் வீழ்ச்சியானது வெளிநாட்டு நடைமுறைக் கணக்கின் செயலாற்றத்தினை மிதமடையச் செய்தது. இருப்பினும், சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கானது 2017 ஏப்பிறலில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை மற்றும் அரச பிணையங்கள் சந்தை போன்றவற்றுக்கான தொடர்ச்சியான வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் மூலம் ஆதரவளிக்கப்பட்டன.

**ஏற்றுமதிச் செயலாற்றம்**

2017 ஏப்பிறலில் ஐ.அ.டொலர் 795 மில்லியனாகக் காணப்பட்ட ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 11.9 சதவீதமான ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியினைப் பதிவுசெய்து தொடர்ச்சியாக இரண்டாவது மாதமாக அதிகரித்தது. இந்த உயர்ந்த வளர்ச்சியானது 2013 ஏப்பிறலிலிருந்து மிகக் குறைந்த மாதாந்த ஏற்றுமதிப் பெறுமதியாக பதிவாகிய 2016 ஏப்பிறலின் குறிப்பிடத்தக்க குறைவான ஏற்றுமதிகளின் மூலம் பிரதானமாக உந்தப்பட்டது.

மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 75 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தும் கைத்தொழில் ஏற்றுமதிகளிலான வருவாய்கள் 2017 ஏப்பிறலில் (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) ஐ.அ.டொலர் 595 மில்லியனுக்கு 8.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு போக்குவரத்துச் சாதனங்கள், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் புடவைகள் மற்றும் ஆடைகளின் உயர்ந்தளவிலான ஏற்றுமதிகளே பிரதான காரணமாகும். இம்மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 23 மில்லியன் பெறுமதியான பொதுவான சரக்குக் கப்பலின் ஏற்றுமதியின்

காரணமாக போக்குவரத்துச் சாதனங்களிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 27 மில்லியனுக்குக் கிட்டத்தட்ட ஐந்து மடங்கிற்கு அதிகரித்தது. பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் எண்ணெய்க் குதங்கள் மற்றும் வான் எரிபொருட்களுக்கான உயர்ந்தளவிலான அளவுகள் மற்றும் உயர்ந்தளவிலான விலைகளினைப் பிரதிபலித்து 2017 ஏப்பிறலில் (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 62.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. கடந்த மாதத்தில், பருவகால முறைகளினைப் பிரதிபலித்து வீழ்ச்சியடைந்த புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2017 ஏப்பிறலில் ஐ.அ.டொலர் 351 மில்லியனாகக் காணப்பட்ட புடவை மற்றும் ஆடைகளின் ஏற்றுமதியானது 3.0 சதவீதமானதொரு மிதமான அதிகரிப்பைப் பதிவுசெய்தது. பொறிகள் மற்றும் எந்திரவியல் சாதனங்கள், அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் மற்றும் பலகை மற்றும் கடதாசி உற்பத்திகள் போன்றவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் 2016 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் ஓர் மேம்பட்ட செயலாற்றத்தினைக் காட்டியது. இருப்பினும், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணிகள் மற்றும் அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் போன்றவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 2016 ஏப்பிறலில் வீழ்ச்சியடைந்தன.

2017 ஏப்பிறலில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் தேயிலை, வாசனைத்திரவியங்கள் மற்றும் கடலுணவு ஏற்றுமதிகள் போன்றன ஐ.அ.டொலர் 196 மில்லியனுக்கு 22.7 சதவீதத்தினால் (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) வளர்ச்சியடைய வழிவகுத்தன. தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களானது ஏற்றுமதி செய்யப்பட்ட அளவுகளில் ஓர் வீழ்ச்சி காணப்பட்ட போதிலும் உயர்ந்தளவிலான சராசரி விலைகளின் காரணமாக (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) ஐ.அ.டொலர் 109 மில்லியனுக்கு 17.1 சதவீதத்தினால் அதிகரித்தது. தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலையானது 2016 செத்தெம்பரிலிருந்து தேயிலை விலைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரித்த போக்கினைப் பிரதிபலித்து 2016 ஏப்பிறலில் காணப்பட்ட கிலோகிறாம் ஒன்றுக்கான ஐ.அ.டொலர் 4.20 உடன் ஒப்பிடுகையில் 2017 ஏப்பிறலில் கிலோகிறாம் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 5.42 ஆக அதிகரித்தது. 2017 ஏப்பிறலில் வாசனைத்திரவியங்களிலிருந்தான வருவாய்கள் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 78.4 சதவீதமானதொரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைக் காட்டியமைக்கு கறுவா மற்றும் கராம்பு ஏற்றுமதி அளவுகளின் அதிகரிப்பே பிரதான காரணமாகும். மேலும், கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2017 ஏப்பிறலில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 59.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ஐரோப்பிய ஒன்றியத்திற்கான கடலுணவு ஏற்றுமதிகள் 251 சதவீத வளர்ச்சியினைப் பதிவுசெய்தமைக்கு கடற்றொழில் உற்பத்திகளுக்கான தடை நீக்கங்களே காரணமாகும். எனினும், தெங்கு மற்றும் இறப்பர் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2017 ஏப்பிறலில் வீழ்ச்சியடைந்தன.

ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2017இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் தேயிலை, வாசனைத்திரவியங்கள், பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் கடலுணவு ஏற்றுமதிகள் போன்றவற்றிலிருந்தான உயர்ந்த வருவாய்கள் மூலம் ஐ.அ.டொலர் 3,569 மில்லியனாக விளங்கி (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 3.5 சதவீதம் வளர்ச்சியடைந்தது. எனினும், கவனத்தில் கொள்ளப்பட்ட காலப்பகுதியில் புடவைகள் மற்றும் ஆடைகள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் மற்றும் உணவு, குடிபானம் மற்றும் புகையிலை போன்றவற்றிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன.

2017இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் இலங்கையின் வணிகப் பொருள் ஏற்றுமதிகளுக்கான முதன்மைச் சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மனி மற்றும் இத்தாலி என்பன விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 51 சதவீதத்திற்கு வகைகூறின.

**அட்டவணை 1: ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)**

| வகை | ஏப்பிறல் 2016 (ஆ) (ஐ.அ.டொ. மில்) | ஏப்பிறல் 2017 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-ஏப் 2016 (ஆ) (ஐ.அ.டொ. மில்) | சன-ஏப் 2017 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **547.9** | **594.9** | **8.6** | **2,713.5** | **2,701.5** | **(0.4)** |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 340.5 | 350.5 | 3.0 | 1,709.8 | 1,626.3 | (4.9) |
| இதில் ஆடைகள் | 319.4 | 330.7 | 3.5 | 1,613.4 | 1,531.7 | (5.1) |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 20.6 | 24.6 | 19.6 | 94.5 | 126.5 | 33.8 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 18.2 | 29.5 | 62.5 | 92.3 | 120.1 | 30.1 |
| உணவுப் பொருட்கள் குடிபானம் மற்றும் புகையிலை | 24.7 | 24.9 | 0.9 | 117.4 | 101.4 | (13.6) |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 23.8 | 16.4 | (31.0) | 98.8 | 80.9 | (18.1) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 5.5 | 27.4 | 400.7 | 52.5 | 66.3 | 26.3 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 10.7 | 8.3 | (22.1) | 49.8 | 49.2 | (1.2) |
| அடிப்படை உலோகம் மற்றும் பொருட்கள் | 8.3 | 7.7 | (7.4) | 23.8 | 35.3 | 47.9 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 0.6 | 2.7 | 370.4 | 6.6 | 12.7 | 94.2 |
| இரசாயன உற்பத்திகள் | 2.1 | 2.3 | 8.4 | 11.6 | 10.5 | (9.9) |
| ஏனையவை | 93.0 | 100.3 | 7.9 | 456.4 | 472.1 | 3.5 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **159.5** | **195.8** | **22.7** | **721.8** | **851.7** | **18.0** |
| தேயிலை | 93.2 | 109.1 | 17.1 | 406.3 | 458.2 | 12.8 |
| தேங்காய் | 27.0 | 24.8 | (8.3) | 114.8 | 115.7 | 0.8 |
| வாசனைத் திரவியம் | 13.0 | 23.2 | 78.4 | 73.9 | 109.2 | 47.7 |
| கடலுணவு | 11.4 | 18.3 | 59.7 | 57.9 | 84.2 | 45.4 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 8.0 | 12.7 | 59.4 | 36.1 | 45.3 | 25.6 |
| இறப்பர் | 2.7 | 2.6 | (5.6) | 12.6 | 19.0 | 50.5 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.2 | 2.5 | 11.5 | 11.4 | 10.4 | (8.6) |
| மரக்கறிகள் | 1.9 | 2.7 | 39.6 | 8.7 | 9.6 | 10.4 |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **2.9** | **4.0** | **37.0** | **14.3** | **15.8** | **10.9** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **710.4** | **794.7** | **11.9** | **3,449.6** | **3,569.0** | **3.5** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானது.

**இறக்குமதிச் செயலாற்றம்**

2017 ஏப்பிறலில் இறக்குமதிகள் மீதான செலவினங்கள் ஐ.அ.டொலர் 1,604 மில்லியனுக்கு (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில) 9.8 சதவீதத்தினால் அதிகரித்தது. ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான மிகப் பெரிய பங்களிப்பு இடைநிலைப்பொருட்களிலிருந்தும் (74.7 சதவீதம்) அதனைத் தொடர்ந்து நுகர்வுப்பொருட்களிலிருந்தும் (20.2 சதவீதம்) முதலீட்டுப்பொருட்களிலிருந்தும் (5.7 சதவீதம்) கிடைத்தன.

2017 ஏப்பிறலில் இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 886 மில்லியனுக்கு (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 13.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு எரிபொருள் மற்றும் அடிப்படை உலோகங்கள் மீதான உயர்ந்தளவான செலவினங்களே காரணமாகும். எரிபொருட்கள் மீதான செலவினம் எண்ணெய்யின் உயர்ந்தளவிலான இறக்குமதித் தொகை மற்றும் வலு உருவாக்கத்திற்கான நிலக்கரி மற்றும் உலகளாவிய சந்தையின் இறக்குமதி விலைகளின் உயர்வு போன்றவற்றினால் இம்மாத காலப்பகுதியில் (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 62.1 சதவீதத்தினால் அதிகரித்தது. மசகு எண்ணெய்க்கான இறக்குமதி விலையானது 2016 ஏப்பிறலில் காணப்பட்ட பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 44.05 இலிருந்து 2017 ஏப்பிலில் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 56.48 ஆக அதிகரித்தது. மேலும், இரும்பு மற்றும் உருக்கு அதேபோன்று வைரங்களை முக்கியமாகக் கொண்ட அடிப்படை உலோகங்கள், குறிப்பாக தங்கம் போன்ற விலைமதிப்பற்ற கற்கள் மற்றும் உலோகங்கள் என்பவற்றின் இறக்குமதி மீதான செலவினங்களும் இடைநிலைப்பொருட்களின் உயர்ந்த இறக்குமதி வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்களவிற்குப் பங்களித்தன. எனினும், 2017 ஏப்பிறலில் கோதுமை மற்றும் சோளம், வளமாக்கி மற்றும் இரசாயன உற்பத்திகள் மற்றும் ஆடைகள் மற்றும் ஆடைப்பொருட்கள் போன்றவற்றின் இறக்குமதிகள் 2016 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தன.

2017 ஏப்பிறலில் நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினங்களானது ஊர்திகள் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் கருவிகளின் இறக்குமதிகளில் ஓர் வீழ்ச்சி காணப்பட்டமைக்கு மத்தியிலும் ஆடைகள் மற்றும் துணைப்பொருட்கள், வீட்டுத்துறை தளபாடப் பொருட்கள் மற்றும் வீட்டலகுகள் போன்ற உணவல்லாத நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளின் உயர்ந்தளவால் உந்தப்பட்டு ஐ.அ.டொலர் 345 மில்லியனுக்கு (ஆண்டிக்கு ஆண்டு அடிப்படை) 9.1 சதவீதத்தால் அதிகரித்தது. உணவு மற்றும் குடிபானங்கள் மீதான் செலவினம் அரிசி, பால் உற்பத்திகள் மற்றும் மரக்கறிகள் போன்ற இறக்குமதிகள் கணிசமமான அதிகரிப்பின் காரணமாக அதிகரித்தது. 2017 ஏப்பிறலில் அரிசி இறக்குமதிகள் 2016 ஏப்பிறலில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 10 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு உள்நாட்டுச் சந்தையில் நிலவிய பற்றாக்குறையினைப் பூர்த்திசெய்வதற்காக அரிசி இறக்குமதிகளை ஊக்குவிக்க அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளே காரணமாகும். இருப்பினும் சீனி, வாசனைத் திரவியங்கள் மற்றும் இறப்பர் உற்பத்திகள் மீதான இறக்குமதிச் செலவினங்கள் ஆண்டிக்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியடைந்தது.

2017 ஏப்பிறலில் முதலீட்டுப் பொருட்கள் மீதான செலவினங்கள் ஐ.அ.டொலர் 372 மில்லியனுக்கு (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) 2.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தமைக்கு கட்டடப்பொருட்கள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்களின் உயர்ந்தளவான இறக்குமதிகளே வழிவகுத்தன. 2017 ஏப்பிறலில் கட்டட மூலப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினங்கள் இரும்பு மற்றும் உருக்கு மற்றும் சீமெந்து இறக்குமதிகளின் காரணமாக அதிகரித்த வேளையில் போக்குவரத்துச் சாதனங்களின் இறக்குமதிகள் அதிகரித்தமைக்கு வர்த்தக வாகனங்களின் உயர்ந்தளவான இறக்குமதிகளே முக்கிய காரணமாகும். இருப்பினும் பொறிகள் மற்றும் கருவிகளின் இறக்குமதிகள் இக்காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தமைக்கு ஆடைக் கைத்தொழிலில் இலத்திரனியல் மோட்டார்கள், வலு உருவாக்கிகள் மற்றும் பொறிகள் இறக்குமதிகள் குறைந்தளவான இறக்குமதிகளே காரணமாகும்.

ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2017இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 6,883 மில்லியனாக விளங்கி (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படை), 13.7 சதவீதத்திற்கு அதிகரித்தமையே பெரிதும் காரணமாகும். எரிபொருள் மற்றும் தங்கம் போன்றவற்றின் இறக்குமதிச் செலவினங்கள் (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) முறையே 76.0 சதவீதத்தினாலும் 158.2 சதவீதத்தினாலும் அதிகரித்தது. அரிசி இறக்குமதி மீதான செலவினம் அதிகரித்த அரிசியின் தொகை காரணமாக இருபத்தெட்டு மடங்கினை விட அதிகமாக அதிகரித்தது. இருப்பினும் ஆண்டுக் காலப்பகுதியில், பொறி மற்றும் உபகரணம், தனியாள் வாகனங்கள் மற்றும் ஆடைகள் மற்றும் ஆடை ஆபரணங்கள் போன்றவற்றின் இறக்குமதி செலவினங்கள் வீழ்ச்சியடைந்தன.

2017இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் இந்தியா, சீனா, ஐக்கிய அரபு எமிறேட்ஸ், சிங்கப்பூர் மற்றும் யப்பான் என்பன முக்கிய இறக்குமதி நாடுகளாக விளங்கி மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 59 சதவீதத்திற்கு வகைகூறின.

**அட்டவணை 2 - இறக்குமதிகள் மீதான செலவினம் (அ)**


| வகை | ஏப்பிறல் 2016 (ஆ) (ஐ.அ.டொ. மில்) | ஏப்பிறல் 2017 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன-ஏப் 2016 (ஆ) (ஐ.அ.டொ. மில்) | சன-ஏப் 2017 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **316.2** | **345.1** | **9.1** | **1,425.5** | **1,515.6** | **6.3** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 117.4 | 123.9 | 5.6 | 516.9 | 629.2 | 21.7 |
| மரக்கறிகள் | 18.4 | 22.8 | 23.5 | 140.1 | 124.3 | (11.3) |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 1.9 | 11.2 | 473.3 | 6.9 | 114.6 | 1,552.0 |
| பால் உற்பத்திகள் | 17.4 | 25.6 | 47.3 | 74.1 | 110.4 | 49.0 |
| சீனி மற்றும் சிற்றூண்டிகள் | 29.3 | 22.8 | (22.2) | 94.3 | 86.6 | (8.2) |
| வாசனைத் திரவியம் | 10.1 | 5.6 | (44.8) | 45.0 | 33.0 | (26.6) |
| குடிபானங்கள் | 9.5 | 6.1 | (35.8) | 25.7 | 25.7 | 0.2 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 30.7 | 29.9 | (2.5) | 130.7 | 134.6 | 2.9 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 198.9 | 221.2 | 11.2 | 908.6 | 886.5 | (2.4) |
| வாகனங்கள் | 67.2 | 56.3 | (16.2) | 298.9 | 248.2 | (17.0) |
| ஆடைகள் மற்றும் துணைப் பொருட்கள் | 20.7 | 56.7 | 174.7 | 120.2 | 143.5 | 19.4 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 111.0 | 108.1 | (2.6) | 489.6 | 494.8 | 1.1 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **778.9** | **885.7** | **13.7** | **3,019.2** | **3,692.2** | **22.3** |
| எரிபொருள் | 200.8 | 325.6 | 62.1 | 686.5 | 1,208.3 | 76.0 |
| இதில் மசகெண்ணெய் | 30.5 | 81.5 | 167.2 | 126.5 | 207.6 | 64.2 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 151.3 | 204.6 | 35.2 | 465.1 | 829.9 | 78.4 |
| நிலக்கரி | 19.1 | 39.5 | 107.4 | 95.0 | 170.8 | 79.8 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 39.0 | 49.6 | 27.2 | 119.8 | 224.6 | 87.5 |
| இதில் தங்கம் | 26.9 | 41.6 | 54.8 | 74.8 | 193.1 | 158.2 |
| புடவைகள் மற்றும் ஆடைப் பொருட்கள் | 198.3 | 193.9 | (2.2) | 896.8 | 860.6 | (4.0) |
| இரசாயனப் பொருட்கள் | 71.6 | 63.5 | (11.4) | 281.1 | 274.2 | (2.5) |
| அடிப்படை உலோகங்கள் | 26.5 | 39.9 | 50.4 | 105.4 | 192.6 | 82.7 |
| கோதுமை மற்றும் சோளம் | 51.1 | 35.2 | (31.2) | 105.6 | 117.8 | 11.5 |
| உணவுத் தயாரிப்புக்கள் | 15.8 | 21.8 | 37.7 | 75.0 | 98.7 | 31.6 |
| கனிம உற்பத்திகள் | 7.7 | 9.3 | 20.2 | 51.8 | 54.5 | 5.1 |
| வளமாக்கி | 13.0 | 2.8 | (78.6) | 54.1 | 22.6 | (58.1) |
| ஏனையவை | 154.9 | 144.2 | (6.9) | 643.1 | 638.3 | (0.7) |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **364.3** | **372.5** | **2.3** | **1,607.8** | **1,614.6** | **0.4** |
| பொறி மற்றும் கருவிகள் | 212.8 | 185.7 | (12.8) | 925.2 | 871.9 | (5.8) |
| கட்டடப் பொருட்கள் | 113.8 | 134.3 | 18.1 | 485.3 | 524.1 | 8.0 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 37.3 | 51.6 | 38.2 | 195.1 | 215.1 | 10.3 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.3 | 0.9 | 160.8 | 2.2 | 3.4 | 53.7 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **1.5** | **0.6** | **(59.2)** | **2.8** | **60.9** | **2,061.4** |
| **மொத்த இறக்குமதி** | **1,460.9** | **1,603.9** | **9.8** | **6,055.4** | **6,883.3** | **13.7** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
லங்கா ஐஓசி பிஎல்சி
இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது

**வரைபடம் 1: ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயலாற்றம்**




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கைச் சுங்கம்

**வர்த்தக நிலுவை**

2017 ஏப்பிறலில் வர்த்தக நிலுவையின் பற்றாக்குறை 2016 ஏப்பிறலில் ஐ.அ.டொலர் 751 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 809 மில்லியனுக்கு விரிவடைந்தது. 2017இன் முதல் நான்கு மாத காலப்பகுதிக்கான ஒன்றுசேர்ந்த வர்த்தகப் பற்றாக்குறை 2016இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 2,606 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 3,314 மில்லியனுக்குக் கணிசமாக அதிகரித்தது.

**சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்**

தொடர்ச்சியாக இரண்டு மாதங்களாகக் காணப்பட்ட வருகைகளின் வீழ்ச்சியை தொடர்ந்து 2017 ஏப்பிறலில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 160,249 ஆக காணப்பட்டு 17.5 சதவீதத்தினால் அதிகரித்தது. இதன் விளைவாக, 2017 முதல் நான்கு மாத காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2016இன் இதையொத்த காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 721,185 உடன் ஒப்பிடுகையில் 765,202 இற்கு 6.1 சதவீத வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. 2017இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து மூலங்களாக இந்தியா, சீனா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் பிரான்சு விளக்கி இக்காலப் பகுதியின் மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 50.3 சதவீதத்திற்கு வகைகூறின. 2017 ஏப்பிறலில் சுற்றுலாவிலிருந்தான[1] வருகைகள் 2016 ஏப்பிறலில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 234.0 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 274.9 மில்லியனுக்கு அதிகரித்தது. அதேநேரம் 2017இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான ஒன்றுசேர்ந்த வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,312.8 மில்லியனுக்கு 6.1 சதவீதத்தால் அதிகரித்தது.

**தொழிலாளர் பணவனுப்பல்கள்**

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவுகின்ற மோசமான பொருளாதார மற்றும் புவிசார் நிலைமைகள் தொழிலாளர் பணவனுப்பல்களில் எதிர்மறையான தாக்கத்தினைத் தொடர்ந்தும் கொண்டுள்ளது. 2017 ஏப்பிறலில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2016இன் ஏப்பிறலில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 578.0 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 487.9 மில்லியனுக்கு 15.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. மேலும், 2017இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்களின் ஒன்றுசேர்ந்த உட்பாய்ச்சல்கள் 2016இன் இதையொத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 2,221.7 மில்லியனுக்கு 6.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

**நிதியியல் உட்பாய்ச்சல்கள்**

ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகள் இரண்டாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 106.3 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சல்கள் மற்றும் முதலாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 48.2 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சல்கள் என்பனவற்றை உள்ளடக்கி ஐ.அ.டொலர் 154.5 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலினைப் பதிவு செய்தன. முன்னைய மாதத்தில் அவதானிக்கப்பட்ட போக்கிற்கு மாறாக 2017 ஏப்பிறல் காலப்பகுதியின் அரச பிணையங்கள் சந்தையின் வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலர் 45 மில்லியன் தேறிய உட்பாய்ச்சலினைப் பதிவுசெய்தன. இருப்பினும், ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2017இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் அரச

[1] இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை அதன் சராசரித் தங்கியிருக்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரிச் செலவு தொடர்பான 2017ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் பற்றிய அளவீட்டினை வெளியிட்டதும் இத்தற்காலிக மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்படும்.

பிணையங்கள் சந்தை ஐ.அ.டொலர் 360.4 மில்லியன் தேறிய வெளிப்பாய்ச்சல்களைக் கொண்டுள்ளது. 2017இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் அரசிற்கான நீண்ட காலக் கடன்கள் 2016இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 7.6 மில்லியனான தேறிய உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 60.3 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலினைப் பதிவுசெய்தது. மேலும், காலாண்டு அடிப்படையில் அறிக்கையிடப்படும் முதலீட்டுச் சபைக் கம்பனிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2017இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 146.5 மில்லியனான தேறிய உட்பாய்ச்சல்கள் காரணமாக தொடர்ந்து மிதமடைந்தது. இது கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ள பல கம்பனிகளினால் முன்கொடுக்கப்பட்ட பங்கினை மீளவாங்குதல் காரணமாக ஏற்பட்ட முதலீட்டுத் திரும்பல்களையும் உள்ளடக்கியுள்ளது.

**திரண்ட சென்மதி நிலுவை நிலைமை**

2017இன் முதல் நான்கு மாத காலப்பகுதிக்கான திரண்ட சென்மதி நிலுவை 2016இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 958.1 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 344.4 மில்லியன் கொண்ட பற்றாக்குறையினைப் பதிவுசெய்திருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

**பன்னாட்டு ஒதுக்குகளும் செலாவணி வீத அசைவுகளும்**

2017 ஏப்பிறல் இறுதியில் இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 5.0 பில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன் 3.0 மாத இறக்குமதிகளுக்குச் சமனானதாகக் காணப்பட்ட வேளையில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 7.5 பில்லியனாக மதிப்பிடப்பட்டு 4.5 மாத இறக்குமதிகளுக்குச் சமனானதாகக் காணப்பட்டது.

செலாவணி வீத அசைவுகள் நியதிகளில், 2016 இறுதியிலிருந்து 2017 யூன் 30 வரையான ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா 2.6 சதவீதம்கொண்ட மிதமான தேய்வொன்றினை பதிவுசெய்தது. மேலும், குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் ரூபாவானது யூரோவிற்கெதிராக 9.4 சதவீதத்தினாலும் ஸ்டேர்லிங் பவுணுக்கெதிராக 7.4 சதவீதத்தினாலும் யப்பானிய யென்னுக்கெதிராக 5.4 சதவீதத்தினாலும் கனேடிய டொலருக்கெதிராக 6.2 சதவீதத்தினாலும் அவுஸ்திரேலிய டொலருக்கெதிராக 7.1 சதவீதத்தினாலும் இந்திய ரூபாவிற்கெதிராக 7.0 சதவீதத்தினாலும் தேய்வடைந்தது.

### அட்டவணை 3: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு (அ)

| வகை | ஏப்பிறல் 2016 ஐ.அ.டொ. மில் | ஏப்பிறல் 2017 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன -ஏப்பி 2016 (ஆ) ஐ.அ.டொ. மில் | சன - ஏப்பி 2017 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 710.4 (ஆ) | 794.7 | 11.9 | 3,449.6(ஆ) | 3,569.0 | 3.5 |
| இறக்குமதிகள் | 1,460.9 | 1,603.9 | 9.8 | 6,055.4 | 6,883.3 | 13.7 |
| வர்த்தக மீதி | -750.5 (ஆ) | -809.2 | 7.8 | -2,605.8(ஆ) | -3,314.3 | 27.2 |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 234.0 (ஆ) | 274.9 | 17.5 | 1,237.3 (ஆ) | 1,312.8 | 6.1 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 578.0 | 487.9 | -15.6 | 2,371.4 | 2,221.7 | -6.3 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (இ) | -7.0 | 71.1 | -1,116.7 | -19.5 | 154.5 | -892.5 |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (ஈ) | 271.4 (ஆ) | 161.3 | -40.6 | 537.4 (ஆ) | 788.3 | 46.7 |
| இதில், | | | | | | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 174.4 | 103.2 | -40.8 | 217.7 | 385.2 | 77.0 |
| நீண்ட காலக் கடன்கள் | 92.2 (ஆ) | 58.1 | -37.0 | 309.6 (ஆ) | 395.2 | 27.6 |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (உ) | - | - | - | 129.4 | 146.5 | 13.2 |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

(அ) தற்காலிகமானது.

(ஆ) திருத்தப்பட்டது.

(இ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஈ) அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள், அரசாங்கத்திற்கான மூலதனம் மற்றும் நடைமுறை மாற்றல்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் என்பனவற்றின் விற்பனையிலிருந்தான உட்பாய்ச்சல்கள் மற்றும் அரசாங்கத்தின் கூட்டுக் கடன்கள் மற்றும் நீண்ட காலக் கடன்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

(உ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் மூன்று மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் உள்ளடக்குகிறது.